# இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு
# ஆண்டறிக்கை-2009-2010

இந்தியத்திருநாடு கடல், கனிம, காடுகள் என்ற மூன்ற வளங்களையும் அதிகமாகப் பெற்ற நாடு. இதில் உள்ள வருமானங்கள் முறையாக முழுவதுமாக அரசுக்கு சென்றடைந்தால் இந்தியா இன்று ஒரு பணக்கார நாடாக இருந்திருக்கும். வெளி நாட்டில் கடனுக்காக கையேந்த வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்காது.

சுதந்திர இந்தியாவின் 62 ஆண்டுகால நிதிநிலை அறிக்கையின் பயன்கள் முறையாக மக்களைச் சென்றடைந்திருந்தால் இன்று இந்தியாவில் 23 சதவீதம் மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருந்திருக்க மாட்டார்கள். புள்ளி விவர அறிக்கையின்படி இன்று இந்தியாவில் போடப்படும் திட்டங்களில் ரூபாய்க்கு 16 காசுமட்டுமே மக்களைச் சென்றடைகின்றது.

வெள்ளையர்கள் இந்தியாவை கொள்ளையடித்து நமது செல்வத்தை எடுத்துச் சென்றார்கள். ஆனால் இன்று நமது நாட்டு கொள்ளையர்கள் அரசியல் வாதிகளின் ஆதரவோடு 20க்கு மேற்பட்ட வெளிநாடுகளில் நமது நாட்டில் சுரண்டிய கறுப்புப்பணத்தை பதுக்கி வைத்துள்ளனர். சுவிஸ் வங்கியில் மட்டும் 72 லட்சம் கோடி நமது நாட்டு கறுப்புப்பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். ***இது நமது நாட்டின் 15 ஆண்டுகால பட்ஜெட் தொகையாகும். மேலும் இந்தத் தொகை நமது நாட்டின் மொத்தக் கடனை அடைக்கப்போதுமானது.*** அமெரிக்கா போன்ற நாடுகளின் பணங்களும் சுவிஸ் வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் பெரும்பான்மையான தொகைகள் அந்நாட்டு அரசின் நடவடிக்கைகளால் திரும்பப் பெறப்பட்டுள்ளது. நாம் இருவர் கைபேசியில் பேசும் பேச்சுக்கள்கூட 6 மாத காலத்திற்கு சேமித்து வைக்கின்ற நிலையில் தொலைத்தொடர்பகங்கள் உள்ள இன்றைய நிலையில் ரகசிய குறியீட்டு எண்ணில் வரவு செலவு செய்யப்படும் சுவிஸ் வங்கியில் யார், யார் பணம் வைத்திருக்கிறார்கள் என்பதை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க ஸ்காட்லாந்துக்கு இணையான நமது காவல்துறையால் முடியாத காரியமல்ல. ஆனால் நடவடிக்கை இல்லை.

இந்த அவலங்களுக்கெல்லாம் என்ன காரணம் என்று எண்ணியபோது நமது நாட்டில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் லஞ்சம் மற்றும் ஊழல்கள்தான் என்ற ஒரேபதில் கிடைத்தது. இந்த கொடிய லஞ்ச அரக்கனை வென்று, நமது நாட்டை மீட்டு, ஒரு வல்லரசாக மாற்ற என்ன செய்யலாம் என்று எண்ணியபோது உருவானதுதான் இந்த கூட்டமைப்பு.

இந்தியாவில் லஞ்சத்திற்கு எதிராக பல்வேறு அமைப்புகள் பல ஆண்டுகளாக ஆங்காங்கே செயல்பட்டு வருகின்றன. ஆனால் லஞ்சம் குறைந்தபாடில்லை. இதைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம்? 200 ஆண்டுகால சுதந்திர போராட்டத்திற்கு பின் மகாத்மா காந்தியடிகளின் அகிம்சைதான் இந்திய சுதந்திரத்தை பெற்றுத்தந்தது. அவர் என்ன செய்தார், போராடிய அனைத்து மக்களையும் ஒன்று சேர்த்தார், வெற்றி பெற்றார். அந்த சிந்தனையை பின்பற்றி, லஞ்சத்திற்கு எதிரான கருத்துடைய அனைத்து மக்களையும் ஒன்று சேர்த்து, லஞ்சம் தராமல் நம் நியாயமான பிறப்புரிமைகளை அடைவது எப்படி, அதன் மூலம் லஞ்சத்தை எப்படி கட்டுப்படுத்த முடியும் என்பதையும், ஆட்சியாளர்கள் தேவையான சட்டத்திருத்தங்களை செய்ய அல்லது புதிய சட்டங்களை லஞ்சத்திற்கு எதிராக இயற்ற மக்களை ஒன்று திரட்டி அறிவுறுத்த வேண்டும் என்ற உயரிய லட்சியத்துடன் டாக்டர் ந. சேதுராமன் அவர்களின் வழிகாட்டுத-ன் பேரில் ஐயா **டாக்டர் எம்.எஸ். உதய மூர்த்தி** அவர்கள் தலைமையில் துவக்கப்பட்டது **இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு**, (FACT India).

மக்களை நிமிடத்திற்கு நிமிடம் பாதிக்கும் தீமைகளுக்கும், லஞ்ச கொடுமைகளுக்கும் எதிரான நடவடிக்கைகளை உண்மையான அக்கரையோடு எடுத்து, ஆங்காங்கே தனித்தனிக் குழுக்களாக செயல்பட்டுவந்த சுமார் 40-க்கு மேற்பட்ட அமைப்புகள், தங்களை இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்புடன் இணைத்துள்ளன. அனைத்து மாவட்ட மற்றும் மண்டலங்களிலும் தனித்தனி பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் லஞ்சத்திற்கு எதிராக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுகின்ற ஒரே அமைப்பு என்ற பெருமை இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பிற்கு உண்டு.

31-3-2009 அன்று **மாறுங்கள் மாற்றுங்கள்** என்ற சுலோகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு, இயக்கப் பிரதிநிதிகளுக்கு திறமையை வளர்க்கும் பயிற்சி வகுப்புகள், தகவல் பெறும் உரிமைச்சட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தி, பலரை உருவாக்கியுள்ளது. மேலும் கடந்த ஓராண்டில் தமிழகத்தின் அனைத்து மாவட்ட மட்டத்திலும் பயிற்சி வகுப்புகள், விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தியுள்ளது. ஊடகங்கள் வாயிலாகவும் நமது அமைபின் செயல்பாடுகள் மக்களைச் சென்றடைந்துள்ளது.

58 ஆண்டுகளுக்குப்பின் கிடைத்த இரண்டாவது சுதந்திரம் எனும் மகத்தான, கூர்மையான தகவல் பெறும் உரிமைச்சட்டம், அதனை நிர்வகிக்கும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் செயலற்ற தன்மையால் முடிங்கிக்கிடக்கின்ற இன்றைய நிலையிலும், நமது பயிற்சியின்படி, மக்கள், தங்கள் தேவைகளை, தாங்களே லஞ்சமின்றி நிறைவு செய்து கொண்ட வெற்றிக்கதைகள் ஏராளம்! ஏராளம்!! பல மாவட்டங்களில் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தை பயன்படுத்தும் மக்கள் மிரட்டப்படுகின்றனர். நமது அமைப்பு மூலம் அவைகளுக்கு பரிகாரம் காணப்பட்டுள்ளது. **மகிழ்வித்து மகிழ்தல்** என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, என்ன செய்வது என்று கைபிசைந்து நிற்கும் மக்களுக்கு அவர்களின் நியாயமான தேவைகளை, பிறப்பு உரிமைகளை லஞ்சமின்றி முடிக்க உதவுவதன் மூலம் அவர்களை மகிழ்வித்து இந்த இயக்கம் மகிழ்ந்து வருகிறது.

நமது புரவலர் திரு **எஸ்.பி. மாத்தூர்,** I.P.S. அவர்களின் அறிவுரையின்படி தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 4 மற்றும் 5-னை முறையாக அனைத்து துறைகளும் தங்கள் இணையதளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பல மாணவர்களுக்கு வங்கிகளில் கல்விக்கடன் கிடைக்க ஆவன செய்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியது, பலருக்கு பட்டா, குடும்ப அட்டைகள், குடிநீர் இணைப்புகள், வீட்டு வரைபட அனுமதிகள், இப்படி பற்பல பிறப்புரிமைகளை அடைய உதவியது, மின்துறையில் நம்மை அணுகிய அனைத்து பொதுமக்களுக்கும் தேவையான அனைத்து உரிமைகளையும் லஞ்சமின்றி முடித்திட உதவியது.

மீன்துறை ஊழல்களை களைய தேவையான நடவடிக்கைகள், கால்நடைத் துறையில் பணியாளர் தேர்வில் உள்ள ஊழலை தோலுரித்து ஒரு மாற்றத்தை உருவாக்கி பாதிக்கப்பட்டவர்களின் பாராட்டைப்பெற்றது, கல்வித்துறை, மாசுக்கட்டுப்பாட்டுவாரியம் முறைகேடுகளை களைய நடவடிக்கை எடுத்தது, வீட்டுவசதி வாரியம், அஞ்சல்துறை லஞ்சம் மீது நடவடிக்கை மேற்கொண்டது, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது, பாஸ்போட் ஊழலை வெளிக்கொணர்ந்தது, நமது அமைப்பின் வீரபெண்மணி, வங்கி மேலாளர் திருமதி சாரநாயகி அவர்களால் லஞ்சம் வாங்கிய அதிகாரிகளை காவல்துறை உதவியோடு பிடித்துக் கொடுத்தது. காவல்துறை அதிகாரிகள், மாவட்ட வருவாய் அதிகாரிகள் உட்பட அதிகமான அதிகாரிகளுக்கு, தகவல் ஆணையத்தால் ரூ.25,000 அபராதம் வாங்கித்தந்தவர்கள் நமது இயக்கத்தினர் என்ற புள்ளி விவரங்கள் இன்றளவும் உள்ளது. மேலும் நமது பத்திரிக்கை பேட்டிகளைப்படித்து, நாம் நினைவில் கொள்ளவேண்டிய அளவிற்குப் பல வெற்றிக்கதைகள் நம்மைத் தேடிவந்துள்ளது.

நாளைய இந்தியாவை உருவாக்கும் இளைஞர்களுக்கு முறையாக லஞ்சமின்றி தங்களது பிறப்புரிமைகளை அடைய பல கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. கல்வியில் ஊழல் லஞ்சம் என்பதை வேரறுக்க, பள்ளிகளில் நடக்கும் கட்டாய வசூலை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்து வருவது, மாணவர்களை ஆசிரியர்களாக நடிக்கச்செய்து, நடைபெற்ற முறைகேட்டினை ஆதாரத்துடன் அண்ணா பல்கலைக்கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து தேவையான நடவடிக்கை எடுக்கச்செய்தது நமது பொறுப்பான நடவடிக்கைகளாகும். Capitation fees என்ற பெயரில் வசூ-க்கப்படும் கல்வி நிலைய லஞ்சத்தை தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியது நமது கடமையாக இருக்கின்றது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊழல் செய்த நம்பேடு பஞ்சாயத்து தலைவியை தேவையான நடவடிக்கை எடுத்ததன் மூலம், பதவி நீக்கம் செய்யப்பட்டது நமது வெற்றிக்கதைகளின் நுழைவுவாயில். இதுமாதிரி இன்னும் ஏராளம் செய்ய வேண்டியுள்ளது.

இப்படி வெற்றிக்கதைகள் பற்பல தொடர்ந்தாலும், நமது செயல்பாடுகளும், மக்களுக்குத் தேவையான நமது அமைப்பின் உதவிகளும், முறையாக, விரைவாக அனைத்து மக்களையும் சென்றடைய இணையதளம் ஒரு சிறந்த கருவி என்பதை உணர்ந்தபோது, அதனை உருவாக்குவதில் மிகவும் உறுதுணையாக இருந்து இன்று இந்த இணையதளத்தினை இந்திய மக்களுக்கு அர்ப்பணிக்க **டாக்டர் T.S. பாலசுப்பிரமணியம் ISRO விஞ்ஞானி** அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி போற்றத்தக்கது. அதற்கு துணையாக உதவிய இளம் பொறியாளர் **திருமதி சுபா ஜவகர், மற்றும் திரு நாசர்கான்** அவர்களையும் இந்நேரத்தில் மறக்க முடியாது. இந்த இணைய தளம் (www.factindia.org) அனைத்து மக்களும் பயன் பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது நமது பயணத்தில் இன்னொரு மைல்கல்.

செய்தியை வீடியோ வடிவில் மக்கள் பார்த்தால் இன்னும் நன்றாக இருக்கும் என நினைத்து அமைப்பின் நிறுவனர் டாக்டர் நா. சேதுராமன் அவர்கள் தனது பொருள் செலவால் இன்று நமது நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்க இருக்கின்ற இன்னொரு வலைதள டி.வி. பேக்ட் இந்தியா டிவி (www.factindia.tv). இது நமது பயணத்தின் மற்றொரு மைல்கல்.

இவைகளை எல்லாம் எப்படி நிர்வகிப்பது என்று எண்ணியபோது கிடைத்த விடைதான் இசிஎஸ். இன்று சுமார் 35 உறுப்பினர்கள் நமக்கு மாதாமாதம் ஒரு தொகையை நன்கொடையாக தருகின்றார்கள். மிக்க மகிழ்ச்சி மற்றும் நன்றி. இது விரிவடைய வேண்டும். இன்னும் பலரின் உதவிகள் தேவைப்படுகின்றது.

நமது நாட்டில் சங்கங்கள், அறக்கட்டளைகள் பல புற்றீசல்போல் தோன்றியுள்ளன. ஆனால் அவைகள் தங்கள் கணக்குகளை வெளிப்படையாக தெரிவிக்க விரும்புவதில்லை என ஆங்கில நாளேட்டில் செய்தி வந்திருந்ததை பலர் படித்திருப்பீர்கள். நல்ல நோக்கத்தில் துவக்கப்பட்ட பெரும்பான்மையான அமைப்புகள் காலப்போக்கில் சுய நலத்திற்காக மாறிப்போனதுதான் நாம் அறிந்த செய்தி. அந்த நிலையை சிறிதும் ஐயமின்றி மாற்றிக்காட்டிட, கொடுக்கப்படும் நன்கொடைகள் எப்படி செலவிடப்படுகின்றது என்பதை அனைத்து மக்களும் விரிவாக தெளிவாக தெரிந்திடும் வகையில் வவுச்சர் வகையாக முழு வரவு செலவுகணக்கையும் வெளிப்படையாக வெளியிட்டிருக்கின்ற ஒரே அமைப்பு நமது இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு. அனைத்துவகை செலவினங்களையும் நம் இணையதளத்தில் பார்வையிடலாம். இம்மாதிரி அடிப்படை கணக்குகளைக்கூட வெளிப்படையாக வெளியிடுகின்ற ஒரே இயக்கம் நமது இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு என்பதை மிகவும் பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன். இதன் மூலம் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்றது நமது அமைப்பு.

கடந்த ஓராண்டில் நம் கூட்டமைப்பிற்கு ஒரு அலுவலகத்தையும் கணினிகளையும் அவற்றிற்கான பணியாளர்களையும் கூட்ட அறையினையும், உணவு செலவினங்களையும் அமைத்துக் கொடுத்து, நமக்கு ஊக்கமும் ஆக்கமும் தொய்வின்றி அமைத்துக் கொடுத்துள்ள நமது நிறுவனர் **டாக்டர் நா. சேதுராமன்** அவர்களையும், நம் செயல்களுக்கு பணஉதவி செய்து கொண்டிருக்கும் **டாக்டர் ஆர்.வி.எஸ். சுரேந்திரன், கிளாசிக்பாம் திரு பாபாசங்கர்** மற்றும் நன்கொடைகள் அளித்தவர்கள், மாதாமாதம் நன்கொடை அளித்துவரும் பல்வேறு நன்கொடையாளர்களையும், இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூற கடமைப்பட்டுள்ளோம்.

இலஞ்சம் மற்றும் ஊழலால் பாதிக்கப்பட்ட மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண கிடைத்துள்ள அமைப்பு இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு என்ற நம்பிக்கையினை நாம் இந்த ஓராண்டில் ஏற்படுத்தியுள்ளோம். இதன் மூலம் பத்திரிக்கைகளும், தொலைக்காட்சிகளும் நம் நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் அளவிற்கு நம் கூட்டமைப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது. இப்படி பல நல்ல செய்திகளை தங்களுடன் பகிர்ந்து கொண்டாலும் இந்த கூட்டமைப்பை தொடங்கியநாம் கிட்டத்தட்ட ஓராண்டு காலத்தில் நம்மை நோக்கி வரும் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதிலேயே பெரும்பகுதி நேரத்தைச் செலவிட்டுள்ளோம்.

இன்னும் நமது திட்டப்படி நமது இலக்கை அடைய முடியவில்லை. இதற்கு பணம் ஒரு காரணம் மற்றும் நமக்கு இன்னும் பல பிரதிநிதிகள் (Volunteers) தேவைப்படுகின்றனர். முழுநேர பணியாளர்கள் பலரை நாம் நியமிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். அப்போதுதான் நாம் ஒரு வரையறை செய்து திட்டமிட்டு நமது இலக்கினை அடைய முடியும்.

***சமூக நலனில் அக்கரை எடுத்து சமுதாயப்பணி செய்யாத யாரும் தமது வாழ்வில் மகிழ்ச்சியாக வாழ்ந்து, வாழ்வின் பயனை அடைந்ததாக நாம் இதுவரை அறிந்ததில்லை.*** அந்த பிறப்பின் பயனை மகிழ்ந்து அடைய இந்த அரிய, உயரிய லட்சியப்பணிக்கு தங்கள் நேரத்தைத் தாருங்கள், தங்கள் நேரத்தை ஒதுக்க முடியாதவர்கள், நல் ஆலோசனைகளைத் தாருங்கள், தங்களால் இயன்ற பொருள் உதவியைத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம். **லஞ்சத்தை ஒழிக்கும் சவாலான நோக்கத்தினை செயல்படுத்திட வெளிப்படையான தூய்மையான நிர்வாகத்தினை, தூய சிந்தனையோடு, செய்துவரும் இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பிற்கு தங்களால், இயன்ற பொருள் உதவி செய்வதன் மூலம் செய்யப்படும் சேவையில் தங்கள் பங்களிப்பினை உறுதி செய்யுங்கள்** என்று கேட்டுக் கொண்டு, நமது இலக்கினையும் செயல் திட்டங்களையும், நிர்ணயம் செய்து, அதில் வெற்றியடைய உங்கள் ஆதரவையும், ஆலோசனைகளையும், வாழ்த்துக்களையும், வேண்டுகிறோம்.

நன்றி! வணக்கம்.

இப்படிக்கு,

(து. இரத்ன பாண்டியன்)
பொதுச் செயலாளர்.